விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 135 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 20 சனிக்கிழமை (03.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## நல்லை ஆதீன குரு முதல்வருக்கு பலரும் நேரில் வந்து அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கொழும்பில் தேகவியோகம் அடைந்த நல்லை ஆதீன சுவாமிகளின் திருவுடல் நேற்றைய தினம் கொழும்பில் இருந்து

04ஆம் பக்கம் பார்க்க

## சுவாமிகளின் திருவுடல் அக்கினியுடன் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் (01) வியாழக்கிழமை தேகவியோகம் அடைந்த நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் திருவுடல் நேற்று அக்கினியுடன் சங்கமமாகியது.

முன்னதாக நல்லை ஆதீனத்தில் வைக்கப்பட்டிருந்த சுவாமிகளின் திருவுடலுக்கு நேற்று மாலை 4 மணியளவில் அபிசேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கிரியைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து கலாநிதி ஆறு.

04ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் புதையல் தோண்டிய ஐவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - செம்மலைப் பகுதியில் புதையல் தோண்டிய ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு சிறப்புப் படை முகாமின் என்.சி.பி. என்.சி.எஸ். விஜேரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் குழுவால் இவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கொக்கிளாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக

15ஆம் பக்கம் பார்க்க

### புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட

# பொதுமக்களின் தங்கம், வெள்ளி

### பதில் பொலிஸ்மா அதிபரிடம் கையளிப்பு
### அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்

(கொழும்பு)

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் விடுதலைப் புலிகளிடமிருந்து இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பொது மக்களின் தங்கம் மற்றும் வெள்ளி என்பன பதில் பொலிஸ்மாஅதிபரிடம்கையளிக்கப்பட்டுள்ளது.உரிமையாளர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி இதனைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

### ரூ.13 இலட்சம் பெறுமதியான

## போதைப்பொருளுடன் வேட்பாளர் கைது

(கொழும்பு)

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் பாணந்துறை நகரசபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 13 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக அலுபோ முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

04ஆம் பக்கம் பார்க்க

## பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் காயம்

### தனது குழந்தைகள் மேலிருந்த பாம்பை கையால் எறிந்த வேளை விபரீதம்

(யாழ்ப்பாணம்)

பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதில் நவாலி தேவாலய வீதியைச் சேர்ந்த கயலவன் ரஜினி (வயது-32) என்பவரே

15ஆம் பக்கம் பார்க்க

### தந்தை செல்வா வழியில் பயணித்தால்

## இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பயணிக்கத் தயார்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(நெல்லியடி)

தந்தை செல்வாவின் கொள்கையின்படி தமிழ் அரசுக் கட்சி நேர்மையாக பயணிக்க முன்வந்தால் நாம் நிச்சயமாக அவர்களுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வந்து இணைந்து பயணிப்போம் என தமிழ்த்

15ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு, கிழக்கில்

## கண்ணிவெடிகளை அகற்றல் தேசியத்தின் தேவை - பிரதமர்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகளை அகற்றல் என்பது ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு

15ஆம் பக்கம் பார்க்க

### 6ஆம் திகதி

## மதுக் கடைகள் பூட்டு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து

15ஆம் பக்கம் பார்க்க

### வாக்கு வேட்டைக்காக

## இனவாதத்தை கையிலெடுத்துள்ள தமிழ் அரசியல்வாதிகள்

### அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

வாக்கு வேட்டைக்காக வடக்கிலுள்ள சில தமிழ் அரசியல்வாதிகளும் ராஜபக்ஷக்களின் சகோதரர்களாக மாறி இனவாதத்தை கையிலெடுத்துள்ளனர் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

யாழ். மாநகர சபைத் தேர்தல் - 2025

எனது அரசியல் பயணத்தை



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து,

விகிதாசார வேட்பாளராக களமிறங்கியுள்ளேன்

“எம்மை நாமே ஆள வீட்டிற்கு வாக்களிப்போம்”

E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி LL.B (Hons), BA [Economics]

(1093)


# விசேட சுற்றிவளைப்பு

# 370 பேர் கைது

நாடளாவிய ரீதியில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 370 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி ஹெரோயின் போதைப்பொருளுடன் 149 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 115 பேரும் கஞ்சா போதைப்பொருளுடன் 105 பேரும் கஞ்சாச் செடிகளுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-4,7)


காணி விற்பனைக்கு

சங்கானை வீதி அச்சுவேலி மேற்கு கொன்மென் பாடசாலையில் இருந்து 200m தூரம் தென்மூலை G.S 287 3 பரப்பு வெட்டுக் கிணற்றுடன்

076 159 8003
076 940 1045

(4089)

காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இருபாலையில் அமைந்துள்ள 6 பரப்பு 4.89 குளி அளவுள்ள ஆதனம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

076 940 1045
076 159 8003

(4089)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.05.1968 மறைவு 01.05.2025

எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடற் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

அமரர் பொன்னையா கிரிதரன் (கிரிஅண்ணா)

அவர்கள் 01.05.2025 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-2874)


உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

வெற்றி நமதே ஊர் எமதே



17 சபைகளையும் வென்றெடுக்க கைகோர்ப்போம்

தேசிய மக்கள் சக்தி
ජාතික ජන බලවේගය
JATHIKA JANA BALAWEGAYA (NPP)

(C-2872)

ஒருங்கிணைந்த அபிவிருத்திக்காகத் திசைகாட்டியுடன் பயணிப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 13 - 11 - 1940

இறப்பு 02 - 05 - 2025

## திருமதி கமலாம்பிகை வீரசிங்கம்

மண்டைதீவு சிறுப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை வீரசிங்கம் நேற்று (02.05.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் குகனேஸ்வரி (ஜெயந்தி), சாந்தி, பரமேஸ்வரன், வசந்தி, சாயீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜேந்திரம், இரத்தி னேஸ்வரன், கமலாதேவி, சிவரூபராஜா, ஹேமலதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், இலட்சுமணன் (செட்டித்துரை), கைலாசநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்ஷன், குமரன், ஜனனி, காலஞ்சென்றவரான வித்தியா மற்றும் ராஜ்பாரதி, தனுஷ், செந்தூரன், கஜன், கானுஜா, கானுஜன், ஆத்மீகன், அர்ஜுன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (4092)

தகவல் -
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 15 . 05 . 1968

உதிர்வு 01 . 05 . 2025

## பொன்னையா கிரிதரன்

### (சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்–பருத்தித்துறை)

கரவெட்டி மத்தி கிழவிதோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா கிரிதரன் அவர்கள் 01.05.2025 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் பொன்னையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்)-சின்னப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகனும், சபாரட்ணம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், சுசிலா (ஆசிரியை-துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ஆதித்தன் (பொறியியற்பீடம்-மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஆதனன் (மாணவன்- பரு/ஹாட்லி கல்லூரி), ஆரபி (மாணவி-பரு/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்குமார் சுதர்சினி (லண்டன்), வாகீசன் வித்தியா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.05.2025 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

கிழவிதோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி. (c-2871)

# சிறுவர்கள் மத்தியில் அதிகரிக்கும் இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று



(கொழும்பு)

மழையுடனான வானிலையை அடுத்து சிறுவர்கள் மத்தியில் இன்புளுவென்ஸா வைரஸ் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், வாந்தி மற்றும் தடிமன் உள்ளிட்டவை இதற்கான அறிகுறிகள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்புளுவென்ஸா A மற்றும் இன்புளுவென்ஸா B வைரஸ் பரவல் இந்தக் காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் குளிர்ச்சியான நாடுகளில் காணப்படும் இன்புளுவென்ஸா A வைரஸ் தொற்று அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த வைரஸ் தொற்று ஏனையோருக்குப் பரவும் அபாயம் காணப்படுவதால் தொற்று இனங்காணப்பட்ட நபர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

நோய் அறிகுறி தென்பட்டால் அருகில் உள்ள வைத்தியரை உடனடியாக நாடுமாறும் அவர் கோரியுள்ளார்.

வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கைகளை கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனக் கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (நி-8)

# 91 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை வடமேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

## செல்வன். கந்தசாமி கிருஷாந்

அவர்களுக்கு



**கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்**

சாமமானாலும் தாய்வீடு தேடிவந்து விடுவாய்
பாசம் கொண்டு நிம்மதியாய் பள்ளி கொள்ள
வீடுவராத நாளினிலே விழித்திருந்து தேடி நின்றோம்
வீடுபேற்றை ஈடேற்ற முனைந்ததன் மாயமென்ன?
பொல்லாத காலனவன் பாதி வழியில் உயிர் பறித்தான்
செல்லாதோ எங்கள் உயர் வானகத்தில் நாம் ஒன்று சேர
வையக வாலிபர்கள் கூலிக்கு மாரடிக்க.
வெட்கப்படும் காலமிது
மெய்சிலிர்க்க வைத்தாய்
தலையில் மாமூடை சுமந்துழைத்து
செய்யும் தொழிலே தெய்வமென்று தயங்காத நெஞ்சமடா!
பெய்யும் மழை, வெயிலோ
வேலைக்குச் செல்லத் தவறமாட்டாய்
வாடிவதங்கிய முகங்களுக்கு
வாரி வழங்கிய வள்ளலடா
தேடி வந்து உனைச் சூழ்ந்து நின்று
ஓலமிடும் கோலமடா
ஓடிவந்து எம்பசி தீர்த்த மாண்புடைய உத்தமன் நீ
தேடிப் பார்க்கின்றோம்
உனைப்போல வருமா எம்மகனே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 02.02.2025 அகால மரணமெய்திய எமது பிள்ளைச் செல்வன் கந்தசாமி கிருஷாந் அவர்களின் துயரச்செய்தி கேட்டு ஓடிவந்து உதவிய சகல அன்பர்களுக்கும் அன்று தொட்டு இறுதிக் கிரியைகளில் இருந்து மயானம் வரைத் தோளிலே சுமந்திறங்கிய கிருஷாந், பிரஷாந் நண்பர்களுக்கும் அன்புறவுகளுக்கும் அவர் கடமையாற்றிய **S.V.M** முருகேசு நிறுவனத்தாரின் பணவுதவி, உணவுப்பொருள் உதவி செய்த உள்ளகப் பொறுப்பாளருக்கும் ஊழியர்களுக்கும் தக்க தருணத்தில் பணவுதவி செய்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும் கண்ணீர் அஞ்சலி, பனர் வழங்கிய நண்பர்களுக்கும் எல்லா விதத்திலும் சரீர உதவிகள் செய்த அத்தனை உறவுகளுக்கும் எமது குடும்பம் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(1033)

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

என்றும் உம் நினைவுகளுடன்: உன் அப்பா, அம்மா
(கந்தசாமி கேமலதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மக்களின்...

பத்தரமுல்லையில் உள்ள இரா ணுவத் தலைமையகத்தில் நேற்று இந்நிகழ்வு நடைபெற்றது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் விடு தலைப்புலிகள் அமைப்பின் வங்கிக ளிலும் அவர்களின் உடமைகளாக இருந்து இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டு விசாரணைக்காக இது வரை வைத்திருந்த தங்கம், வெள்ளி, மாணிக்கங்கள் உள்ளிட்ட ஆபர ணங்கள் இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பொருட்களில் அடங்கும்.

இதன்படி 120 ஆபரணப் பொதி கள் நேற்று பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டன.

சட்டமா அதிபரின் ஆலோசனை யின் பேரில் இந்தப் பொருட்கள் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் இலங்கை மாணிக்க மற்றும் ஆபரண அதிகார சபையால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் இலங்கை மத்திய வங்கியிடம் ஒப் படைக்கப்படவுள்ளன.

இந்தத் தங்கப் பொருட்கள் ஆப ரண அதிகார சபையால் பரிசோதிக் கப்பட்ட பின்னர் அவற்றின் மதிப்பு மற்றும் எடை அளவு பகிரங்கப்படுத் தப் ட்டு ஊடகங்களுக்கு அறிவிக்கப் படவுள்ளது.

இந்தப் பொருட்களின் உரிமையா ளர்கள் தங்கள் அடையாளத்தை உறு திப்படுத்திய பின்னர் அவற்றை மீள ஒப்படைக்க முயற்சிகள் மேற்கொள் ளப்படும் எனப் பதில் பொலிஸ்மா அதி பர் இதன்போது தெரிவித்தார். (ம-4,7)

## நல்லை...

யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு நல்லை ஆதீனத்தில் பொதுமக்களின் பிரார்த்தனைக்காக வைக்கப்பட்டி ருந்தது.

இதன்போது சமயத் தலைவர்கள், சிவாச்சாரியர்கள், அரசியல் தலைவர் கள், பேராசிரியர்கள், நீதிபதிகள், அரச அதிகாரிகள், ஆலய அறங்காவலர் கள், உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் சுவாமிகளின் திருவுட லுக்கு மரியாதை செலுத்தினர்.

மேலும் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் படை அதிகாரிகள் இதன்போது சுவாமிகளுக்குத் தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர்.

மேலும் தமிழகத்திலுள்ள ஆதீனத் தலைவர்கள், முன்னாள் இந்தியத் தூதுவர்கள், வெளிநாடுகளிலுள்ள சைவ சமய அமைப்புகள் தமது அனு தாபச் செய்திகளை அனுப்பியிருந்தத மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## சுவாமிகளின்...

திருமுருகன் அவர்களின் தலைமை யில் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், வேதாந்த குரு பீடாதிபதி சுவாமி வித்தி யாசாகர், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகி யோரின் பிரார்த்தனை உரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து மாலை 5.30 மணியள வில், விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் சுவாமிகளின் திரு வுடல் வைக்கப்பட்டு, இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.

சுவாமிகளின் விருப்பப்படி நல்லூர் செம்மணி இந்து மயானத்தில் தகன நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாலை 6 மணி 50 நிமிடமளவில் சுவாமிகளின் திருவுடலுக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அக்னி ஏற்றும் செய்ய சுவாமிகளின் திருவுடல் தீயுடன் சங்கமமாகியது. (ம-7)

# குஷியில் குஜராத்

## •புள்ளிப் பட்டியலில் முன்னேறியதால்
## •மங்கியது சன்ரைசர்ஸின் பிளே ஓப் வாய்ப்பு



அணித் தலைவர் சுப்மன் கில், பட்லர் அரைச்சதம் கடந்து கைகொடுக்க குஜராத் அணி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாத்தில் (குஜராத்) உள்ள உலகின் பெரிய மோடி மைதானத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் குஜராத், ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணித் தலைவர் கம்மின்ஸ், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**கில் அபாரம்:** குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில், சாய் சுதர்சன் கலக்கல் ஆரம்பம் கொடுத்தனர். மொஹமட் ஷமி வீசிய 3வது ஓவரில் 5 பவுண்டரி விரட்டிய சுதர்சன், ஹர்ஷல் படேல் வீசிய 5வது ஓவரில் 4 பவுண்டரிகள் விளாசினார். கம்மின்ஸ், உனத்கட் ஓவரில் தலா 2 பவுண்டரிகள் விரட்டினார். கில். முதல் விக்கெட்டுக்காக 87 ஓட்டங்களைச் சேர்த்த போது ஜீஷான் அன்சாரி பந்தில் சுதர்சன் (48) ஆட்டமிழந்தார். ஷமி பந்தை பவுண்டரிக்கு விரட்டிய கில், 25 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். கில் (76) "ரன்-அவுட்" ஆனார்.

**பட்லர் அரைசதம்:** அன்சாரி பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த பட்லர், 31 பந்தில் அரைச்சதம் எட்டினார். கம்மின்ஸ் "வேகத்தில்" பட்லர் (64) வெளியேறினார். உனத்கட் வீசிய கடைசி ஓவரில் வோஷிங்டன் சுந்தர் (21), ராகுல் தெவாட்யா (6), ரஷித் கான் (0) ஆட்டமிழந்தனர்.

குஜராத் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்த 224 ஓட்டங்களை எடுத்தது. ஷாருக்கான் (6) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**அபிஷேக் ஆறுதல்:** கடின இலக்கை விரட்டிய ஐதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 49 ஓட்டங்களைச் சேர்த்தபோது பிரசித் கிருஷ்ணா பந்தில் ஹெட் (20) ஆட்டமிழந்தார். இஷான் கிஷான் (13) சோபிக்கவில்லை. மறுமுனையில் அசத்திய அபிஷேக் சிக்சர் மழை பொழிந்தார். கோயட்ஸி பந்தை சிக்சருக்கு அனுப்பிய அபிஷேக் 28 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இவர், 74 ஓட்டங்களில் (6 சிக்சர், 4 பவுண்டரி) ஆட்டமிழந்தார்.

மொஹமட் சிராஜ் "வேகத்தில்" அனிகேத் வர்மா (3), கமிந்து மெண்டிஸ் (0) வெளியேறினர். ரஷித் கான் ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்டார் நிதிஷ் குமார் ரெட்டி.

20 ஓவர்களின் நிறைவில் ஹைதராபாத் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. நிதிஷ் குமார் (21), கம்மின்ஸ் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஏழாவது தோல்வியை பெற்ற ஹைதராபாத் அணியின் "பிளே-ஓப்" வாய்ப்பு கிட்டத்தட்ட முடிவுக்கு வந் தது. குஜராத் சார்பில் பிரசித் கிரு ஷ்ணா, சிராஜ் தலா 2 விக்கெட் டுக்களைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகன் விருதை பிரசித் கிருஷ்ணா வென்றார். (ம-4,7)

## போதைப்...

சந்தேக நபர் 102 கிராம் ஐஸ், 6 கிராமுக்கு மேற்பட்ட போதைப் பொருள் மற்றும் போக்குவரத்துக்கு பயன்படுத் தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆகிய வற்றுடன் பொலிஸாரால் கைது செய் யப்பட்டார். (ம-4,7)


உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2025

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்

தலைவர் CVK சிவஞானம் தலைமையில்

பொதுச்செயலாளர் M.A சுமந்திரன் மற்றும் கட்சியின்

பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள்

பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை

உறுப்பினர்கள் பங்கு பற்றும்

"மாபெரும் பொதுக்கூட்டம்"

இடம் : கிட்டு பூங்கா, நல்லூர்

காலம் : 03.05.2025

நேரம் : பி.ப 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஆச்சி, அப்பு ஆண்ட மண்ணை

அப்புகாமிகள் ஆள்வதா?

நம் ஊர் தமிழரசோடு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி


31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 04.04.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கணபதி இராசையா

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று 03.05.2025 சனிக் கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய மணிமண்டபத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிறப்பு 18.11.1955 இறப்பு 04.04.2025

வளர்பிறை ஊரெழு கிழக்கு

இங்ஙனம் : குடும்பத்தினர்

(1090)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சைவம் காக்கும் தூண் சரிந்தது



உலகெங்கும் சைவத்தைக் கொண்டு சென்ற: இலங்கை யாழ்ப்பாணம் நல்லை ஆதீனக் குருமுதல்வர் இறையடியில் சேர்ந்தது சைவ சமயத்திக்குப் பேரிழப்பாகும் என இந்தியாவின் தருமை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் சைவத்தை வளர்க்க மதுரை ஆதீனம் 291 ஆவது மகா சந்நிதானம் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்று தம்முடைய கதாகலேஷத்தால் சமயத்தை புராணத்தை மாதக்கணக்கில் சொற்பொழிவாற்றிய சாமிநாத சுவாமிகளுக்குப் பின் இரண்டாம் பட்டமாக தருமை ஆதீனத்தில் முறையாக காஷாயம் தீட்சைகள் பெற்று ஈழத்தமிழர் வாழும் தேசந்தோறும் பல மாநாடு நிகழ்வுகளில் பங்கேற்று சமயம் பரப்பியவர்.

நாம் மாவிட்டபுரம் கும்பாபிஷேகம் தரிசிக்கச் சென்ற போது கூட சித்தாந்த மாநாட்டிற்கு அழைப்பு விட்டோம். இந்தியாவில் தங்கி மருத்துவம் பார்க்கலாம் என்றோம். வருகிறேன் என்று கூறி மகிழ்ந்தவர் மாநாடு தொடக்கத்தில் முதல் நாள் பரிபூர்ணம் எய்தியமையால் தாங்க முடியாது துயறுருகின்றோம்.

சைவம் காக்கும் தூண் சரிந்தது. தக்கவர்கள் அம்மடத்தினின்று சமயத்தை காக்க செந்தமிழ் சொக்கன் திருவருளை சிந்திக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

**ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள், குருமுதல்வர், தருமை ஆதீனம், இந்தியா.**

# சைவ மரபின் அரணாக திகழ்ந்தவர் நல்லை குருமுதல்வர்

நற்றமிழ் வளர்த்த ஞான சம்பந்தப் பெருமானுடைய பெயரையே கொண்டு விளங்குகின்ற நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை இலங்கையில் யாழ்ப்பாணத்து நல்லூரில் நிறுவி சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றி முதற் குரு மஹா சந்நிதானம் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் 11.04.1981 பூரணத்துவம் அடைந்த பின்னர் யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமுதல்வராகப் பொறுப்பேற்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமி ள் நேற்று முன்தினம்(01.05.2025) இரவு சித்திரைத் திருவாதிரை வளர்பிறை பஞ்சம திதியில் பூரணத்துவம் அடைந்தார்.

நல்லை ஆதீனத்தைத் தோற்றுவித்த முதலாவது குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பூரணத்துவம் பெற்றதன் பின்னதாக, தனது 34 வயதில் நல்லை ஆதீனத்தின் குருமுதல்வராகப் பொறுப்பேற்று 44 ஆண்டுகள் ஆதீனமாக வீற்றிருந்து அறமாற்றிய சுவாமிகள் தன்னாலான சகல பணிகளையும் சிறப்பாக ஆற்றி வந்தவர்.

சிறந்த மனிதநேயப் பண்பாளர், சகல மார்க்கத்தினையும் அவர்களது நம்பிக்கையையும் மதிப்பளிக்கும் உயர்ந்த நல்லிணக்கச் சிந்தனை கொண்ட மகான். அரை நூற்றாண்டு காலம் ஈழத்துச் சைவ சமயத்தின் தலைமகனாக விளங்கித் தம் வாழ்வை மிக இளமை காலத்திலிருந்து சைவத்திற்குத் தந்த ஆதீன சுவாமிகள். போரும் இடப்பெயர்வும் நிறைந்த கடினமான காலத்தில் எந்த வித பணபலம், பொருட்பலம், ஆட்பலம் இன்றிய சூழலிலும் ஆதீன மரபைப்பேணி சைவ மரபின் அரணாகத் திகழ்ந்தவர். இவரின் இழப்பு அனைத்துலக சைவத்தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

குருமகா சந்நிதானம் அவர்களின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளில் நித்திய பூரணத்துவம் அடைய எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனை வேண்டுவதோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்ற சமூகம் சார்பாக இரங்கல்களையும் தெரிவித்தமைகின்றோம்.

**இந்துமன்றம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**

# தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க என்றும் அவர் தவறியதில்லை



இந்து சமயத்துக்காக பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இறைவனடி சேர்ந்தமையறிந்து கவலையடைகின்றேன்.

இந்து சமயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அவரை மிக நீண்டகாலமாக நான் அறிவேன். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனம் ஊடாக இந்து சமயத்தை வளர்ப்பதற்காக பல நிகழ்வுகளை நடத்தி வந்திருக்கின்றார். அவற்றுக்கு மேலாக சிறுவர்களிடத்தே இந்து சமயத்தின் மீதான ஈர்ப்பை அதிகரிக்கவும். இந்து சமய அறநெறிகளைப் போதிக்கவும் பல விடயங்களை அவர் முன்னெடுத்திருந்தார் என்பது மிக முக்கியமானது.

இதற்கும் மேலதிகமாக. போர்க் காலத்திலும் சரி அதற்குப் பின்னரான காலங்களிலும் சரி. யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற இராஜதந்திரிகள். அரசியல்வாதிகள் என்று அவரைச் சந்திக்காமல் எவரும் செல்வதில்லை.

எமது மக்களின் உண்மை நிலையை எடுத்துக்கூறுவதற்கு அவர் என்றும் பின்நின்றதில்லை. சமயத் தலைவராக இருந்த போதும் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்காகவும் குரல் கொடுத்து வந்த ஒருவர்.

அவர் ஆற்றிய பணிகளுக்காக என்றும் எம் மக்களால் நினைவு கூரப்படுவார்.

அவருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பாக ஆத்ம வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன், ஆளுநர், வடக்கு மாகாணம்.**

# சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் குரல் கொடுத்து வந்தவர்

யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மணிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் பூரணமடைந்த செய்தி சைவ மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தியா மதுரை ஆதீன திருமடத்தின் தொடர்புடன் 1966 ஆம் ஆண்டு ஆரம்பித்து சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் குரல் கொடுத்து பல்வேறு நற்பணிகள் ஆற்றிவந்துள்ள ஆதீனமாகும். முதலாவது ஆதீன கர்த்தராக மணி ஐயரவர்கள் விளங்கினார்கள்.

நல்லை ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் விளங்கினார்.

அமைதியான சுபாவமுடைய வராக அனைவரையும் அன்புடன் வரவேற்று அரவணைத்து வழிகாட்டிடும் ஓர் மகா புருஷராக விளங்கினார்.

இச்சமயத்தில் சைவ மக்களாகிய நாமெல்லோரும் சுவாமிகள் திருவடி பணிந்தவர்களாக சிவசா யுச்சியத்திற்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்வோம்.

**சிவாகமகலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள், தலைவர், இந்துக் குருமார் அமைப்பு, சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள், செயலாளர், இந்துக்குருமார் அமைப்பு.**

# ஈடு செய்ய முடியாத இழப்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் சிவசாயுச்சியம் எய்தியமை எமைப் பெருந்துயரத்தில் ஆழ்த்தியது.

இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள் 1981 இல் தமது இளவயதில் இப்பொறுப்பான பணியை ஏற்றுக் கடந்த 44 ஆண்டுகளாக மிகுந்த அர்ப்பணிப்புடனும் நிதானத்துடனும் தமது பணிகளை முன்னெடுத்து ஆதீனத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வந்தார். யுத்தத்தினால் சகல மக்களும் நிலை குழம்பித்தடுமாறிக் கொண்டிருந்த தருணங்களிலெல்லாம் சுவாமிகள் ஆற்றிய பணிகளும் வழங்கிய ஆதரவுகளும் மறக்கவொண்ணாதவை. சர்வ மதப் பெரியார்களுடன் சமரச உறவை ஏற்படுத்தி நலிவுற்றோருக்கு வேண்டியவற்றை நிறைவேற்றினார். தமது இளமைக்கால வாழ்வினை ஆதீனத்திற்காகவே அர்ப்பணித்ததோடு ஓய்வு. உறக்கமின்றி அரும்பணி ஆற்றியும் வந்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இறுக்கமானதொரு பிணைப்பினைக் கொண்டிருந்த சுவாமிகள் மாமன்றத்தால் நடத்தப்படும் சைவ மாநாடுகள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் அனைத்திலும் வெகு ஆர்வத்துடன் கலந்து சிறப்பித்து ஆசி நல்கி வந்தார்.

இறைவன் திருவுளப்படி சமாதி அடைந்த இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள். இட்டு நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி சிவாயுச்சியம் எய்தியுள்ளார்.

இக்கடினமான தருணத்தில் இந்து மாமன்றம் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவிப்பதோடு பரிபூரணமடைந்த குருமகாசந்நிதானத்தின் ஆத்மா இறைவனடி சேரவும் பிரார்த்திக்கிறது.

**வே.கந்தசாமி**
**[illegible]**
**அகில இலங்கை இந்து மாமன்றம்.**

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



**நல்லை ஆதீன குருமுதல்வர்,**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்**

01.05.2025 வியாழக்கிழமை அன்று தேகவியோகம் அடைந்து விட்டார்.

சைவ சமயத்தின் தலைமைத்துவக் குருவாக விளங்கி எமது மக்களை ஆற்றுப்படுத்திய சுவாமிகளின் புனிதமான ஆத்மா எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிகளில் நித்திய பேரின்பம் பெற்று மக்களை ஆசீர்வதிக்க வேண்டுமென இறைதாள் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

**வலம்புரி நிர்வாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் போதை மாத்திரைகளை கடத்திய குற்றச் சாட்டில் இளைஞன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் களுத்துறை வடக்கு, மங்கல வீதி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 10,550 போதை மாத்திரைகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள் என. இதனையடுத்து, கைது செய்யப் பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

## குறிகாட்டுவான் துறைமுகத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்க அதிகாரிகள் கள ஆய்வு



(யபழ்ப்பாணம்)

புங்குடுதீவு குறிகாட்டு வான் துறைமுகத்தின் அபிவிருத்தியை முன்னெ டுக்கும் நோக்கில், ஒரு விசேட கள ஆய்வுப் பய ணம் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

இவ் விஜயத்தில் இலங்கை துறைமுக அதிகார சபை யின் பணிப்பாளர் ரணசிங்க மற்றும் அவர் தலைமையிலான அதிகாரிகள், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி சபையின் பணிப் பாளர், பொறியியலாளர்கள், கடற்படை அதிகாரிகள் மற்றும் அமைச்சர் விமல் ரத்நாயக்காவின் விசேட இணைப்பாளர் சிறீ வாகிசனும் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தார்.

துறைமுகத்தின் நிலவரத்தை நேரில் பார்வையிட்டு, தொழில்நுட்ப தேவைகள் மற்றும் அபிவிருத்திச் சாத்தியக் கூறுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதன் மூலம், எதிர் காலத்தில் குறிகாட்டுவான் துறைமுகம் மீன்பிடித் துறைமற்றும்பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் வகையில் திட்டமிடப்பட உள்ளது. (6-8-33)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு (சரசாளி) அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது.

இவ் உற்சவ தினங்களில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 10 ஆம் திகதி சனிக் கிழமை சப்பறத்திருவிழாவும், 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், அன்று இரவு 7.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் - திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித் துள்ளனர். (3-8)

## யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மன வளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் அறிவுத் திருக் கோவில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரை யுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப் பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ் துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர , தைராய்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சி கள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் வழங் கப்படும். பயிற்சிகளை தமிழ் நாட்டி லிருந்து வருகைதந்துள்ள மன வளக் கலைப் பேராசிரியர் சு.காமாட்சி அவர்கள் வழங்குவார் கள். தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (3-8)

## ஆடிவேல் விழாவை முன்னிட்டு ஆரம்பமான பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

கதிர்காமக் கந்தன் ஆலயத் திற்கான பாதயாத்திரை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலி லிருந்து நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு செல்வ சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயக் கருவறையில் பூசை வழிபாட்டிற்காக வைக்கப்பட்ட பாதயாத்திரைக்கான வேல் கப்புறாளையால் குறித்த பாத யாத்திரைக்கு தலைமை தாங் கிச் செல்லும் ஜெயாவேல் சாமியின் கையில் கையளிக்க பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பாத யாத்திரை ஆரம்பமாகியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (6-8-33)



## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கோப்பாய் தென் கோவை திருவருள்மிகு கற் பகப் பிள்ளையார் ஆலய வரு டாந்த மஹோற்சவம் எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம் பமாக உள்ளது. இவ் மஹோற் சவ தினங்களில் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக் கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திரு விழாவும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திரு விழாவும், 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழா வும் இடம்பெற்று அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது என ஆலய திருப்பணிச் சபையினர் தெரி வித்துள்ளனர். (3-8-33)



கொக்குவில் கலைவாணி முன்பள்ளியின் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

## இராசிபலன்

03.05.2025
சித்திரை 20, சனிக்கிழமை
புநர்பூசம் முன்னிரவு 6.19 மணிவரை

சஷ்டி பிற்பகல் 2.03மணிவரை
சுபநேரம் 2.56-4.26 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணிவரை

சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம்
கேட்டை , மூலம்

**வளவன்**

**மேஷம்** செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற் படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனு கூலம் தரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், போசன சுக முண்டு.

**கடகம்** அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன் றாக நடைபெற ஆண்ட வனைப் பிரார்த்திப்பீர்கள், வெளி யூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

**துலாம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னே ற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெற லாம், பெரிய மனிதர்களின் சந்திப் புண்டு.

**மகரம்** உறவினர் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** தொழில் நலன் கருதிய திட்டங்கள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** அந்நியதேசத் தொடர்பு கள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரி க்கும் நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடு ம்ப மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் நண்பர் களிடையே கோபமாய் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்ப ந்தப்பட்ட வகையில் நன் மையுண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வழி பாட்டால் சந்தோசம் காண வேண் டிய நாள்.

**கன்னி** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம் பிக்கை அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய் வீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களைச் சந் தித்து மகிழ்வீர்கள், உற வினர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடை க்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரி யாத சந்தோசம் குடிகொள்ளும் நாள்.

முட்டாள் சகவாசம் விட்டால் சந்தோசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுச்சீட்டு விநியோகம்

# ஒரு நாள் சேவை மூன்று நாட்களுக்கு நிறுத்தம்

### குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்காக 24 மணி நேரம் செயற்படும் சேவை மூன்று நாட்களுக்கு நிறுத்தப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இம்மாதம் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் கடவுச் சீட்டு விநியோகம் ஒரு நாள் சேவை நிறுத்தப்படவுள்ளது. அத்துடன், சாதாரண சேவைகள் மட்டுப்படுத்தப்படவுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## பல்கலை கல்விசார் ஊழியர் வெற்றிடம்

# ஆட்சேர்ப்பு ஆரம்பம்

### உயர்கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகப் பிரதியமைச்சர், மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

சுமார் 2000 கல்விசார் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகப் பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னுரிமையின் அடிப்படையில் குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படுமென பிரதியமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (நி-8)

## உள்ளூராட்சி தேர்தல்

# ஊழியர்களுக்கான விடுமுறை தொடர்பில் அறிவிப்பு

(கொழும்பு)

2025 உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க தனியார் துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டாய விடுமுறை தொடர்பில் தேசிய தேர்தல் ஆணையம் அறிவித் துள்ளது. உள்ளூராட்சித் தேர்தலுக்கான விடுமுறை சிறப்பு விடுப்பாக வழங்கப்பட வேண்டும், மேலும் அது அவர்களின் தனிப்பட்ட விடுப்பைப் பாதிக்கக்கூடாது என்று தேர்தல் ஆணையம் விடுத்துள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

தனியார் துறை ஊழியர்களுக்கு 40 கிலோமீற்றர் தூரம் வரை பயணம் செய்வதற்கு - அரை நாள் விடுப்பும், 40-100 கிலோமீற்றர் தூரம் வரை பயணம் செய்வதற்கு ஒரு நாள் விடுப்பும் வழங்கப்பட உள்ளது. 100-150 கிலோ மீற்றருக்கு இடையிலான பயணத்திற்கு ஒன்றரை நாட்கள் விடுப்பும், 200 கிலோ மீற்றருக்கு மேல் பயணத்திற்கு இரண்டு நாட்களும் விடுப்பு வழங்கப்படும்.

அதேநேரம், ஒரு சில வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று திரும்பி வருவதற்கு 3 நாட்கள் தேவைப்படக்கூடிய கணிசமான அளவு இடங்களும் இருக்கின்றமையால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மூன்று நாட்கள் விடுமுறையும் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 8,9 ஆம் திகதிகளில் கூடவுள்ள பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் கூடவுள்ளது.

சபாநாயகரின் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சுங்க கட்டளைச்சட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ள அதேநேரம் எதிர்வரும் 9ஆம் திகதி தனிநபர் பிரேரணை சபையில் முன்வைக்கப்படவுள்ளது. (நி-8)

# INVITATION FOR BIDS (IFB)

## Poonakary Pradeshiya Sabha, Poonakary

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the **Poonakary Pradeshiya Sabha** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building or road construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of Public Contract Act No 03. Of 1987 for the contracts exceed 5 Million works. The Original certificate of Registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 05.05.2025 until 20.05.2025 | | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 15.05.2025 | | | | | |
| | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 21.05.2025 | | | | | |
| Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security/ Refundable Cash Deposit | |
| | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| PSDG/NP/KN/POPS/2025/LAR/03 | Construction of Karukkaithivu Road | PSDG | 8.47 | 84 | C8 or above (Highway Construction) | 3,000.00 | 6-August-2025 | 127,000.00 | 03-September-2025 |
| PSDG/NP/KN/POPS/2025/OS/01 | Improvement of Vadiyadi Market | PSDG | 1.27 | 84 | C9 or above (Buildings) | 3,000.00 | 9-July-2025 | 19,000.00 | 6-August-2025 |
| PSDG/NP/KN/POPS/2025/OS/02 | Construction of fence at 19th mile Post Market | PSDG | 1.69 | 84 | C9 or above (Buildings) | 3,000.00 | 9-July-2025 | 25,000.00 | 6-August-2025 |
| PSDG/NP/KN/POPS/2025/OS/03 | Construction of fence at Mulankavil market | PSDG | 2.03 | 84 | C9 or above (Buildings) | 3,000.00 | 9-July-2025 | 31,000.00 | 6-August-2025 |
| PSDG/NP/KN/POPS/2025/CWS/01 | Construction of water tank and water supply Facilities at Mulankavil | PSDG | 3.79 | 84 | C9 or above (Buildings) | 3,000.00 | 9-July-2025 | 57,000.00 | 6-August-2025 |
| PSDG/NP/KN/POPS/2025/LAR/RURAL/01 | Construction Culverts (2 number of Box Culvert) at 5th cross street of Pillaiyar | PSDG | 2.54 | 84 | C9 or above (Highway Construction) | 3,000.00 | 9-July-2025 | 38,000.00 | 6-August-2025 |
| | Nagar RDS area of Pallikuda to rain water drain to Tank – Selected model Village | | | | | | | | |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi (T.P:0212282666, Fax:0212284572 email: poonakaryps@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. During the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi on or before 14.30 Pm as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend in person or vital in the address above.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, **Secretary, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi. Commencing at 10.30 AM as stated in table above.**
9. All Bids must be accompanied by either Bid security or refundable cash deposit as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Poonakary Pradeshiya Sabha,**
**Poonakary.**

(c-2870)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியப் பாடல்களுக்கு தடை விதித்தது பாகிஸ்தான்!



(இஸ்லாமாபாத்)

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான தற்போதைய நெருக்கடியைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தான் வானொலி நிலையங்கள் இந்தியப் பாடல்களை ஒலிபரப்புவதை நிறுத்திவிட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

பாகிஸ்தான் ஒலிபரப்பாளர்கள் சங்கம் நாடு முழுவதும் உள்ள பாகிஸ்தான் வானொலி நிலையங்களில் இந்தியப் பாடல்களை ஒலிபரப்பத் தடை விதித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ஷகீல் மசூத் அறிவித்தார்.

இந்நிலையில் பாகிஸ்தான் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் இந்த முடிவை அந்நாட்டு தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அதாவுல்லாஹ் தரார் வரவேற்றுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற சோதனையான காலங்களில் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதிலும் அடிப்படை மதிப்புகளை ஆதரிப்பதிலும் அனைவரும் ஒற்றுமையாக நிற்கிறார்கள் என்பதற்கு இந்தியப் பாடல்கள் தடைசெய்யப்பட்டுள்ளது சான்றாகும் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் நடிகர் ஃபவாத் கான் நடித்த "அபிர் குலால்" திரைப்படம் இந்தியாவில் வெளியிடப்படாது என்று மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

பாகிஸ்தானுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களுக்கு மத்தியில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ரி-8)

# போரைத் தொ
# முடித்து வை

## அடாவடி
## கடுப்



சமீபத்தில் காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் மீது நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கிடையில், பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷெரீப் சவுத்ரி இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது: இந்தியா ஏதேனும் தாக்குதலை நடத்தினால், அதற்கு வலுவான மற்றும் நன்கு சிந்திக்கப்பட்ட பதிலடி கொடுக்கப்படும். "தாக்குதல் நடைபெறும் இடத்தை இந்தியா தீர்மானிக்கும், ஆனால் அது எங்கு முடியும் என்பதை நாங்கள் தீர்மானிப்போம்". தரைவழி, வான்வழி மற்றும் கடல்வழி என மூன்று முனைகளிலும் பதிலடி கொடுக்கப் பாகிஸ்தானின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை முழுமையாக தயாராக இருக்கிறது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னால் பாகிஸ்தான் இருப்பதாக இந்தியா எப்படி ஒரு சில நிமிடங்களில் முடிவு செய்தது? தாக்குதல் நடந்த இடம் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து (எல்ஓசி) சுமார் 230 கிலோமீற்றர் தொலை

## ஈரானிடம் எண்ணெய் வாங்கினால் தடை விதிப்பேன்! - ட்ரம்ப்

(வோஷிங்டன்)

ஈரானிடம் எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பேன்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதை தடுக்க, புதிய ஒப்பந்தத்தை கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். மேலும், அணு ஆயுத உற்பத்திக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தத்திற்கு உடன்பட மறுத்தால், ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பகிரங்க எச்சரிக்கை விடுத்து இருந்தார்.

இந்நிலையில் தற்போது ஈரானுடன் வர்த்தக உறவு வைத்திருக்கும் நாடுகளுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரான் எண்ணெய் அல்லது பெட்ரோ கெமிக்கல் பொருட்களின் அனைத்து கொள்முதல்களும் இப்போதே நிறுத்தப்பட வேண்டும்.

ஈரானில் இருந்து எந்த அளவு எண்ணெய் அல்லது பெட்ரோ கெமிக்கல்களை வாங்கினாலும், அந்த நாடு அல்லது நபர் உடனடியாக இரண்டாம் நிலைத் தடைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

அவர்கள் அமெரிக்காவுடன் எந்த வகையிலும், வணிகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்களுக்குப் பொருளாதார தடை விதிக்கப்படும்.இந்த விடயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி. இவ்வாறு ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். (ரி-8)

## போர் ஒத்திகையில் பாகிஸ்தான்! புகைப்படங்களை வெளியிட்டு அச்சுறுத்தல்!



(இஸ்லாமாபாத்)

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப்பின் பாகிஸ்தான் இராணுவ தளபதி அசிம் முனீர், சில நாட்களாக வெளியே தலைகாட்டவில்லை. இவர் பதுங்கு குழிக்குள் இருப்பதாகவும், குடும்பத்தினரை வெளி நாட்டுக்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டங்குங்கள் ...க்கின்றோம்!

## ...டியாகப் பேசி இந்தியாவை ...ப்பேற்றும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

**"எங்கே, எப்போது போரைத் தொடங்குவது என நீங்கள் (இந்தியா) முடிவு செய்யுங்கள். இறுதி முடிவை நாங்கள் (பாகிஸ்தான்) அது எங்கு முடியும் என்பதை சொல்கிறோம்" என பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவர் அடாவடியாகப் பேசி இந்தியாவைக் கடுப் பேற்றியுள்ளார்.**

வில் உள்ளது.

இவ்வளவு கடினமான பாதை வழியாக யாராவது 10 நிமிடங்களில் அங்கு எப்படி அடைய முடியும்?" தேர்தலுக்கு இலாபம் பார்க்கவே முஸ்லிம்களுக்கு எதிரான சூழலை உருவாக்க இந்திய அரசு பயங்கரவாதம் தொடர்பான சம்பவங்களைப் பயன்படுத்துகிறது என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

கப்பட்டது.

அத்துடன் இவர் மாயமாகிவிட்டார் எனக் கூறப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் இராணுவ தலைமையகம், இவர் இந்திய - பாகிஸ்தான் எல்லையில் உள்ள ஜீலம் மாவட்டத்தில் நடக்கும் போர் ஒத்திகை நிகழ்ச்சியில் இராணுவ வீரர்களுடன் இருப்பதாகப் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

காஷ்மீர், ராஜஸ்தான் எல்லைகள் உட்பட மூன்று இடங்களில் பாகிஸ்தான் தரைப்படை மற்றும் விமானப்படை போர் ஒத்திகை நடத்துவது குறித்த படங்களையும் பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது.

தங்களிடம் எப். 16, ஜெ. 10, ஜெ.எப். 17 ரக போர் விமானங்கள் இருப்பதாகவும், பாகிஸ்தான் அறிவித்துள்ளது. (நி-8)

## நியூசிலாந்தில் புயல் அவசரகால நிலை அறிவிப்பு



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் கனமழை புயல்காற்று போன்ற சீரற்ற காலநிலையில் வெலிங்டனில் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

தென்மேற்கு பசுபிக் கடல் நாடான நியூசிலாந்து வடக்குத் தீவு மற்றும் தெற்கு தீவு என இரு பகுதிகளை உள்ளடக்கியது. இந்த நாட்டின் தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் கன மழை பெய்ததால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் மக்கள் தவித்த நிலையில் அவர்களை மீட்புப் படையினர் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

கிறிஸ்ட் சர்ச் நகரில் பெய்த கனமழையைத் தொடர்ந்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு தீவுகளின் சில பகுதிகளிலும் கடுமையான மழை மற்றும் கடலில் பேரலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெலிங்டனில் பயங்கர புயல் காற்று வீசியதால் கடும் சேதம் ஏற்பட்டது. மணிக்கு 150 கி.மீ வேகத்தில் வீசிய இந்த புயலால் பெரும் ஆபத்து ஏற்படும் என வானிலை மையம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளது. யாரும் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்றும், பயணங்களைத் தவிர்க்கவும் என்றும் அறிவுறுத்தியிருந்தது.

இதையடுத்து வெலிங்டனில் இருந்து புறப்படும் மற்றும் இறங்கும் விமானங்களின் சேவைகள் நேற்று முன்தினம் ரத்து செய்யப்பட்டன. படகுச் சேவையும் நிறுத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. புயல் காரணமாக மரங்கள், மின்கம்பங்கள் முறிந்து விழுந்ததால் மின்சாரமும் தடைபட்டிருந்தது. (நி-8)

## ரஷ்யா - வடகொரியா இணைப்புப் பாலம் கட்டுமானப் பணிகள் ஆரம்பம்



(மொஸ்கோ)

ரஷ்யாவையும், வடகொரியாவையும் இணைக்கும் புதிய பாலத்தை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யப் பிரதமர் மிக்காயில் மிஷ்ஷ்டின் தெரிவித்துள்ளார்.

புதிய பாலத்தின் கட்டுமானப் பணிகளுக்கான ஆரம்ப விழாவில் கலந்து கொண்டபோதே மிஷ்ஷ்டின் இதனை தெரிவித்தார்.

அண்டை நாடுகள் என்ற முறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த ரஷ்யாவும் வடகொரியாவும் விரும்புகின்றன எனவும் இதற்கான சின்னமாகவே புதிய பாலம் திகழும் எனவும் மிஷ்ஷ்டின் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், கடந்த ஆண்டு வடகொரியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது இதற்கான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் சில நீக்கம்

## புதிய வர்த்தமானியில் அறிவிப்பு

(கொழும்பு)

வாகன இறக்குமதி மீதான சில கட்டுப்பாடுகளை நீக்கும் வகையில் நிதி அமைச்சு புதிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனூடாக, இறக்குமதி செய்யப்பட்டும் பல்வேறு காரணங்களால் விடுவிக்க முடியாமல் துறைமுகத்தில் காணப்படும் பல வகையான கார்களை விடுவிக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விளக்கமளித்த இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே,

"ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களாக இந்த வாகனங்களை எங்களால் விடுவித்துக்கொள்ள முடியவில்லை. Hybrid Toyota Raize மற்றும் Hybrid Nissan X-TRAIL புதிய வர்த்தமானி வெளியிட்டதன் காரணமாக, இப்போது அவற்றை பெற்றுக்கொள்ள முடியும். இதேபோல், இந்த தொழில்நுட்பத்தின் கீழ் வரும் ஏனைய வாகனங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்."

இதேவேளை, பதிவு செய்யப்படாத புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதி அனுமதிகளைப் பெற்று புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L,அலுவலக உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15387

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்: மகம்
கி-பா- 0
உயரம்: 5'7"
தகைமை/தொழில்-NVQ,Web Developer(நெதர்லாந்து)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15390

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி-பா-23 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BBA,DO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15393

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி-பா-57
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L, Studio
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15394

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 14
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: HND, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15395

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: அனுஷம்
11இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc, Unior Executive(pvt)
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ:இ: G/13874

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 24
12இல் செவ் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: LLB. நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்
எதிர்பார்ப்பு: அரச வேலை
தொ.இ: G/14601

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
உயரம் :5'4"
தகைமை/தொழில்: BSC பட்டதாரி
எதிர்பார்ப்பு: சைவ போசனம், உத்தியோகம்
தொ.இ: G/14607

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 16 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.Com, Banker
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/10870

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 18
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Bsc, MBA, Consultant(pvt)
எதிர்பார்ப்பு: Graduate, சைவபோசனம்
தொ.இ: G/14793

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 365



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அரசு எவ்வழி

ஒரு அரசன் ஒரு நாள் வேட்டைக்கு சென்றான். அப்படிச் செல்லும் வழியில் ஒரு இடத்திலே தங்கினார். அது ஒரு சின்ன கிராமம். அரண்மனையிலிருந்து எடுத்து கொண்டு வந்திருந்த உணவை பரிமாறினார்கள். உணவை அரசன் உண்ண ஆரம்பித்தார். அப்பொழுதுதான் ஒரு விடயம் தெரிய ஆரம்பித்தது. உணவிலே உப்பு போதவில்லை. சிறிது குறைவாகத் தெரிந்தது. உடனே அரசன் ஒரு சேவகனைக் கூப்பிட்டார். குதிரையிலே ஏறி நேராக அரண்மனைக்குப் போ! அங்கே போய் சிறிது உப்பு கொண்டு வா உணவில் போட்டு சாப்பிடுவதற்கு என்றார்.

பக்கத்திலே நின்று கொண்டிருந்த அமைச்சர் இதைக் கவனித்தார். உடனே மெதுவாகக் குனிந்து அரசனிடம் ஒரு யோசனை கூறினார். அரசே! சிறியளவு உப்பிற்காக இங்கேயிருந்து இவ்வளவு தூரத்திற்குப் போக வேண்டுமா? இப்பொழுது நாம் தங்கியுள்ள இந்த கிராமமும் நமது ஆட்சிக்கு உட்பட்டது தானே! இங்கேயே ஏதாவது ஒரு வீட்டிலே சிறிதளவு உப்பு வாங்கிக் கொள்ளலாமே!

அரசனுக்கு உப்பு தேவை என்றால் போதாதா?உப்பு மூட்டை மூட்டையாக வந்து குவிந்துவிடாதா? இந்தச் சிறிய விடயத்துக்காக ஒரு சேவகனை அரண்மனை வரைக்கும் அனுப்ப வேண்டுமா? அப்படி என்றார் அமைச்சர். அரசன் நிமிர்ந்து பார்த்தார். அமைச்சரே நீங்கள் சொல்வது போல இங்கேயே வாங்கிக்கொள்ளலாம் தான்! உணவிற்காக நான் இங்கே சிறிய அளவு உப்பு வாங்கினேன் என்று தெரிந்தால் போதும் நமது ஊழியர்கள் இந்த ஊரையே வாங்கிவிடுவார்கள் என்றார் அரசர். பார்த்தீர்களா! இதில் இருந்து என்ன தெரிகின்றது?

ஒரு அரசனாக இருக்கின்றவர் அல்லது ஒரு கூட்டத்துக்குத் தலைவனாக இருக்கின்றவர் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கவேண்டியிருக்கின்றது என்பது தெரிகின்றது. அவர் ஒரு சிறிய தவறு செய்தாலும் அதையே ஒரு ஆதாரமாக வைத்து கொண்டு அவருக்கு கீழே இருக்கின்றவர்கள் ஏகப்பட்ட தவறு செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஒரு அரசனுக்கு இருக்க வேண்டிய தகுதியிலேயே இது மிகவும் முக்கியம். அடுத்தபடியாக இருக்க வேண்டிய தகுதி வாக்குத் தவறாமை. சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டும். சொல்கின்றது ஒன்று செய்கின்றது ஒன்றாக இருக்க கூடாது. அதுக்கும் ஒரு கதை உண்டு.

ஒரு அரசன். அவருக்கு ஒரு நண்பன் இருந்தான். அந்த நண்பன் அரசனைக் காண வந்தான். அரசே என்னுடைய பிள்ளைகளுக்கு தின்பண்டம் வாங்க வேண்டும் ஒரு ரூபாய் இருந்தால் கொடுங்கள்! என்றார். சரி நீ கேட்டபடி உனக்குப் பணம் தருகின்றேன் ஆனால் அதற்கு முதல் நாம் இருவரும் ஒரு வில்வித்தை போட்டியைப் பார்த்துவிட்டு வருவோம் வா! என்று கூப்பிட்டார். சரி என்று இவரும் புறப்பட்டார்கள். இருவரும் புறப்பட்டு போட்டி நடைபெறுகின்ற இடத்துக்கு சென்றனர். அங்கே பெரிய பெரிய ஆட்கள் எல்லோரும் அம்பு விட்டுக் கொண்டு இருந்தார்கள். ஆனால் எந்தவொரு அம்புமே சரியான இடத்துக்குப் போகவில்லை. எல்லாம் குறி தவறிப் போய்கொண்டு இருந்தது. அரசன் பார்த்தார் அவருக்கு கோவம் வந்துவிட்டது.

என்ன இது? ஒருவருக்கும் சரியாக அம்பு விடத் தெரியவில்லை! என்று சொல்லி கொண்டே ஒரு அம்பையும் வில்லையும் வாங்கினார். தன்னோடு வந்திருந்த நண்பனிடம் அதை கொடுத்தார். நீ இந்த அம்பை விடு பார்க்கலாம் என்றார். அவர் அம்பை எய்தார் குறி தவறாமல் அந்தப் புள்ளியிலே விழுந்தது. அரசருக்கு மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. உடனே நூறு ரூபாயை எடுத்து அவருக்கு அன்பளிப்பாக கொடுத்தார்.

அதன்பின் போட்டியெல்லாம் முடிந்தபின் அரசனும் நண்பனும் அரண்மனைக்குச் சென்றனர். அங்கே வந்ததும் அரசே கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்டீர்களே! என்றான். என்ன வாக்குறுதி? என்றான் அரசன். ஒரு ரூபாய் தருவதாகக் கூறினீர்களே! என்றான்.அதுதான் நூறு ரூபாய் கொடுத்தேனே என்றார் அரசன். அப்பொழுது அந்த நண்பன் அரசனைப் பார்த்து சொன்னான். கொடுப்பதாக வாக்களிக்காத நூறு ரூபாய் கொடுக்கின்றாதாகக் கூறிய ஒரு ரூபாய்க்கு ஈடாகாது. அரசனாக இருக்கின்றவர் சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டும். அதுதான் முறை என்றார்.

அரசனாக இருக்கின்றவர் எப்படி இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெரிகின்றது. அரசனிடம் வேலை செய்பவர்களும் மக்களைக் கஷ்டப் படுத்தாதவர்களாக இருக்கவேண்டும். ஒரு அரண்மனையில் விருந்து நடந்து கொண்டு இருந்தது. அந்த ஊர்ப் பழக்கமாக ஓர் எலுமிச்சை பழத்துண்டை எடுத்து எல்லோரும் தங்களது உணவுகளில் பிளிந்து விட்டார்கள். அடுத்தபடியாக ஒருவர் எடுத்தார் சாறு வரவில்லை. உடனே ஒரு பயில்வான் வந்து அதை பிளிந்தார். அதிலும் ஒரு சொட்டுதான் வந்தது. சக்கையாகப் போய்விட்டது. ஒருவர் அதை எடுத்தார்.

அவர் பார்ப்பதற்க்கு நோஞ்சான் மாதிரி எலும்பும் தோலுமாக இருந்தார். இருந்தாலும் அவர் சக்கையை எடுத்துப் பிழிந்தார் நிறைய சாறு வந்தது. எல்லோருக்கும் ஆச்சரியம். கசக்கி பிழிவதில் இவ்வளவு கெட்டிக்காரராக இருக்கின்றாரே! இவர் யார்? என்று விசாரித்தார் அரசன். இவர் தான் நமது ஊர் மக்களிடம் வரிவசூல் பண்ணுபவர்! என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்

## முன்னாயத்த கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 09.06.2025 அன்று நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பொங்கல் உற்சவ தினத்தில் ஆலயச் சூழலில் மருத்துவ சேவை, சுகாதார சேவை, முதலுதவி சேவை, நீர் சுகாதார சேவை, வர்த்தக நிலையங்களுக்கான உரிமம், பாதுகாப்பு, அனர்த்த முன்னாயத்த ஏற்பாடு, போக்குவரத்து சேவை, மின்சார சேவை முதலான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், உதவி மாவட்டச் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, அரச மற்றும் தனியார் போக்குவரத்துக் கழகத்தினர், மின்சார சபையினர், மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தி யோகத்தர்கள், கிராம சேவையாளர், பாதுகாப்பு படைப்பிரிவினர், ஆலயப் பரிபால சபையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-8)

# கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா நகரத்தில் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா யாழ் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வாகனம் ஒன்றில் வந்த இருவர் உணவுப்பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

குறித்த வாகனத்தினைச் சுகாதாரப் பரிசோதர்கள் பரிசோதனை செய்ய முற்பட்ட போது விற்பனையாளர்களினால் அவர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. இதனால் அந்த பகுதியில் சற்று நேரம் குழப்பநிலை ஏற்ப்பட்டது.

இதனை அடுத்து சுகாதாரப் பரிசோதகர்களால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் குறித்த இருவரினையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியினால் எதிர்வரும் 09.05.2025 ஆரம்பிக்கப்படவுள்ள கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஆரம்ப ஆங்கில கற்கைநெறி சான்றிதழ், உல்லாசப்பயணமும், விருந்தோம்பல் முகாமைத்துவம் ஆரம்பக் கற்கைநெறி, கணனிமயப்படுத்தப்பட்ட கட்டடக்கலை வரைபடங்களை வரைதல் மற்றும் கணனிவரைகலை ஆகிய 3 மாத காலப்பகுதியினைக் கொண்ட கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2358 என்ற இலக்கத்துன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (3-8)

# தமிழ் மக்களின் வலிமையை தேர்தலில் காண்பிக்க வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசியத்தின் வலிமையை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் காண்பிக்க வேண்டும் என வடக்கு, கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்

குறித்த சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி என்பது எமக்கான அதிகாரங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. இதை எமது தமிழ் தேசியத்தில் இருக்கும் ஒரு தரப்பினரே ஆளுகை செய்ய வேண்டும்.

தென்னிலங்கையின் கட்சிகளின் பிரதிநிதிகள், அவர்களால் இறக்கப்பட்டுள்ள சுயேட்சைக் குழுக்கள் போன்றவை எம்மை மீண்டும் ஏமாற்றவே முயல்கின்றன. இவர்களை இனியும் நம்ப முடியாது.

இதைவிட வடக்கில் தென்னிலங்கை கட்சிகளின் நலன்களை நிலைநாட்ட எமது சிலர் அக்கட்சிகளின் சார்பில் போட்டியிடும் எமது இருப்பை இல்லாதொழிக்க முயல்வது வெட்கக்கேடான விடயமாகும்.

எமது மக்களுக்காக இது வரை ஏதோ ஒரு வழியில் உழைத்த எமது தமிழ் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுக்கு வாக்களித்து அவர்களின் கராங்களுக்குக் கொடுப்பது அவசியம் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# மன்னாரில் இடம்பெற்ற மேதின நடைபவனி



(மன்னார்)

சுரண்டல் அடக்குமுறைக்கு எதிராக விவசாய சக்தியை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் வட மாகாண மக்கள் திட்டவரைபு ஒன்றியத்தின் தலைமையில் மே தின நடைபவனி மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது நிறுத்து நிறுத்து அத்துமீறிய குடியேற்றத்தை நிறுத்து, தொல்லியல் திணைக்களமே எமது வரலாற்றை மாற்றாதே, உள்ளிட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் நடைபவனியில் ஈடுபட்டு இருந்தனர்.

வடக்கு- கிழக்கு உட்பட்ட, நாடு பூராகவும் மக்கள் பெருந்திரளாக கூடி- இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அநீதிகள் மற்றும் சட்ட ஆட்சியை நிறைவேற்ற வேண்டும், விவசாயிகளுக்கு இருக்கின்ற உரிமைகளை வழங்கவேண்டும், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரமுன்னர் கூறியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர். (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 120 | 150 |
| தக்காளி | 700 | 800 | 800 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 250 | 2000 |
| கோவா | 400 | 300 | 400 | 400 |
| கரட் | 800 | 800 | 900 | 900 |
| பூசணி | 200 | 200 | 150 | 250 |
| புடோல் | 150 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 100 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 200 | 250 | 350 |
| பயற்றங்காய் | 400 | 250 | 500 | 400 |
| லீக்ஸ் | 250 | 450 | 300 | 450 |
| பீற்றூட் | 600 | 350 | 600 | 600 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1500 | 1400 | 1600 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | -- | 380 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 180 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | -- | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 320 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 761





விட்டு விட்டு, மறுபடியும் ஒரு தடவை சுற்று முற்றும் பார்த்துவிட்டு ஐயனார்கோவிலை நோக்கி நடந்தான். கோவில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கோயிலுக்குள்ளேயிருந்து என்று வெளிச்சம் தெரிந்தது. கோயிலுக்குள் விளக்கேற்றப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொண்டார்கள்.

சற்று உற்றுப் பார்த்த பின்னர் அந்த மனிதன் யார் என்பதும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. கடம்பூர் மாளிகையில் பணியாளனாக இருந்துகொண்டே ரவிதாஸனுடைய சதிக் கும்பலிலும் சேர்ந்திருந்த இடும்பன்காரிதான் அவன்.

இதை இருவரும் ஏக காலத்தில் அறிந்து கொண்டதும் ஒருவரையொருவர் பார்த்துத் தங்கள் வியப்பைச் சமிக்ஞையினாலேயே தெரிவித்துக் கொண்டார்கள். இடும்பன்காரி திறந்திருந்த துவாரத்தை அப்படியே

"தம்பி! இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று முணுமுணுக்கும் குரலில் அடியான் கேட்டான். "ஐயனார் சக்தியுள்ள தெய்வம் என்று நினைக்கிறேன் குதிரைக்கு உயிர் வந்ததைப் பார்க்கவில்லையா?" என்றான் வந்தியத்தேவன்.

"அது சரி! இப்போது வந்தானே, அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" அவன் ஐயனார் கோவில் பூசாரி போலிருக்கிறது. நாமும் போய்ச் சுவாமி தரிசனம் செய்யலாமா? கொஞ்சம் பொறு! இன்னும் யாராவது சுவாமி தரிசனத்துக்கு வருகிறார்களா என்று பார்த்துக் கொள்ளலாம்."

"இன்னும் யாரேனும் வருவார்கள் என்று நினைக்கிறீர்களா?" பின் எதற்காக இவன் விளக்குப் போடுகிறான்?" பூசாரி கோவிலுக்கு விளக்குப் போடுவதில் ஆச்சரியம் என்ன?" தம்பி! அவன் யார் என்று தெரியவில்லையா?"

"நன்றாய்த் தெரிகிறது, கொள்ளிடத்தின் தென் கரையில் எனக்குக் குதிரை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தானே? அந்த இடும்பன்காரி இவன்தான்! இப்போதும் இவனிடம் குதிரை கேட்கலாம் என்று பார்க்கிறேன். நல்ல யோசனை செய்தாய்.

"உமக்குப் பிடிக்கவில்லையா? இடும்பன் காரி உனக்குக் குதிரை வாங்கிக் கொடுத்தவன் மட்டும் அல்ல. ரவிதாஸன் கூட்டத்தைச் சேர்ந்தவன்." அப்படியானால் இன்னொரு நல்ல யோசனை தோன்றுகிறது." என்ன? என்ன? இடும் பன்காரி ஐயனார் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் போது, அவன் எங்கிருந்து வந்து முளைத்தான் என்பதைப் பார்த்துத் தெரிந்து கொண்டு வரலாம் என்று எண்ணுகிறேன்."

"அது எப்படி முடியும்?" அவன் வெளியே வந்த துவாரத்தில் நான் உள்ளே போக முடியாதா? முடியலாம், ஆனால் அதில் உள்ள அபாயங்கள்... அபாயம் இல்லாத காரியம் எது? அப்புறம் உன் இஷ்டம்? வைஷ்ணவரே! நீங்கள் இங்கேயிருந்து என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருங்கள்" அதற்கென்ன கஷ்டம்? நான் இருந்து பார்த் துக் கொண்டிருக்கிறேன். சுரங்க வழி எங்கே போகும் என்று உனக்கு ஏதாவது தோன்றுகிறதா? "தோன்றுகிறது சுவாமி, தோன்றுகிறது! அது சரிதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்." (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வெள்ளை யானை பறக்கிறது



(02.05.2025 அன்றைய தொடர்ச்சி)

குருவே! யானை கறுப்பாக இருக்கும் போது தந்தம் வெள்ளையாக இருக்கிறது.

அது போல யானை வெள்ளையாக இருந்தால், தந்தம் கறுப்பாக அல்லவா இருக்க வேண்டும்? எனக் கேட்டான், பாகன்.

ஆமாம் நீ சொல்வதும் சரிதான் என்றபடி அடுப்புக் கரியைத் தேய்த்து. தந்தங்களில் பூசி விட்டான், முட்டாள் இது தேவலோகத்தில் இருந்து பிடித்து வந்தது என்பதை அரசன் நம்ப வேண்டும். அதனால் இரண்டு இறக்கைகள் கட்ட வேண்டும். என்றார் பரமார்த்தர்.

குருவின் யோசனையை உடனே செயற்படுத்தினான், மூடன் எல்லா வேலையையும் முடிந்தது. யானையைச் சுற்றி வந்து பார்வையிட்ட குரு.

அற்புதம்: இது இந்திரலோகத்து யானையேதான் என்ற படி அதன் தும்பிக்கை யைத் தொட்டுக்கும் பிட்டார்.

மறுநாள், அரண்மனைக்கு முன்னால் மக்கள் கூட்டம். வெள்ளை யானையைப் பார்ப்பதற்காக மந்திரிகள் புடை சூழ மன்னனும் வந்தான்.

திறந்த வெளியில் கட்டி இருந்த யானையைப் பார்த்த அரசன், அதிசயமாக இருக்கிறதே இந்த யானையை எங்கிருந்து பிடித்து வந்தீர்கள்? என்று கேட்டான்.

தேவலோகம் வரை தேடிக் கொண்டு போனோம் என்று புளுகினான், மண்டு ஐயோ இதைப் பிடிக்க நாங்கள் பட்ட பாடு எங்களுக்குத்தான்தெரியும்! என்றான் மூடன்.

தந்தம் மட்டும் கறுப்பாக இருக்கிறதே? என்று மந்திரி கேட்டதும், அது வைரம் பாய்ந்த தந்தம்! அப்படித்தான் இருக்கும்! என்றான் முட்டாள்.

இவர்கள் பேசிக் கொண்டே இருக்கும் போது, திடீரென்று பலத்த காற்று அடிக்க ஆரம்பித்தது. உடனே யானையின் மீது கட்டப்பட்ட இறக்கைகள் பிய்த்துக் கொண்டு கீழே விழுந்தன.

உடனே பலத்த மழையும் பெய்ய ஆரம்பித்தது. மழை நீர் யானையின் மீது பட்டதும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுண்ணாம்பு எல்லாம் கரைந்து, வெள்ளை யானை கறுப்பாக மாறியது.

இதைப் பார்த்த குருவுக்கும் சீடர்களுக்கும் பயத்தால் உடம்பு வெட வெட என்று நடுங்கியது.

சிறிது நேரத்திலேயே பரமார்த்தரின் சாயம் வெளுத்து விட்டது. வழக்கம் போல் தண்டனைக்கு ஆளானார்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதை மற்றும் முழு மனித குலத்தின் மீதான அன்பே நல்ல நடத்தையை உருவாக்கும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## துறவறம் பூண்டு ஞானவாழ்வு வாழ்ந்த நல்லை ஆதீன முதல்வர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் குரு முதல்வர் இரண்டாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்று முன்தினம் மே முதலாம் திகதி தேகவியோகம் அடைந்துவிட்டார் என்ற செய்தி நெக்குருக வைப்பதாகும்.

ஆம், எங்கள் சைவ சமயத்தின் ஆதீன குரு முதல்வராகக் கடந்த 44 ஆண்டுகளாக இருந்து தவவாழ்வு வாழ்ந்தவர் நல்லை ஆதீன சுவாமிகள்.

ஆதீன மரபுகளை ஒருபுறம் வைத்துவிட்டு, அன்பே சிவம் எனும் உயரிய தத்துவத்தை மெய்மையாகக் கடைப்பிடித்தவர்.

எல்லோரையும் சமத்துவமாக நேசித்தவர். சைவ சமயத்தின் தலைமைத்துவத்தை அடையாளப்படுத்தியவர். சாந்தமான பேச்சு, தெய்வீகத் தன்மைமிக்க தோற்றப் பொலிவு, எதையும் நிதானமாகப் பேசுகின்ற ஆற்றல் எனும் உயரிய மானிடப் பண்புகளைக் கொண்டமைந்த நல்லை ஆதீன குருமுதல்வர், எந்தச் சந்தர்ப்பத்திலும் சமய பேதம் பார்த்தவர் அல்ல.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர்களுடன் உள்ளன்போடு கூடிய அப்பழுக்கற்ற தொடர்பாடலைப் பேணியவர்.

கூடவே எந்த மதத் தலைவர்களாயினும் அவர்களுக்குரிய மதிப்பை வழங்க வேண்டும் என்ற உயரிய எண்ணம் சுவாமிகளிடம் நிலை பெற்றிருந்தது.

அதன் காரணமாகவே, பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அவர்கள் கொழும்புக்கு வருகை தந்தபோது, நல்லை ஆதீன சுவாமிகள் கொழும்பு சென்று பாப்பரசருக்குப் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார்.

அந்தத் தருணத்தில் பாப்பரசரும் நல்லை ஆதீன குரு முதல்வரும் ஆரத் தழுவிய புகைப் படங்களே தென்னிலங்கைப் பத்திரிகைகளின் முதன்மைச் செய்திகளாயின.

அதேபோன்று பௌத்த, இஸ்லாமிய மதத் தலைவர்களுக்கும் உரிய மதிப்பளித்து பணியுமாம் பெருமை என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக அத்தனை ஆட்சித் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் இன்னும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து ஆதீன சுவாமிகளைச் சந்திக்கும்போது; அவர்களை அன்போடு அழைத்து அறமெனும் தர்ம சிந்தையூடாக எங்கள் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறியவர்.

அந்தச் சந்திப்புக்களின் போதெல்லாம் அவர் தமிழ் மக்களின் இன்னல்களை எடுத்துக்கூறினாரேயன்றி, அந்தச் சந்திப்பினூடு ஆதீனத்தின் தேவையை நிறைவேற்றிக் கொள்ள அவர் ஒருபோதும் நினைத்தவர் அல்ல.

அத்தகு உயர்ந்த ஞானவாழ்வு வாழ்ந்த நல்லை ஆதீன சுவாமிகள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் அவரின் புனிதமான ஆத்மா நல்லூரான் திருவடியில் எந்நாளும் இருந்து எங்களை ஆசீர்வதிக்கும் என்பது சர்வ நிச்சயம்.

## தேர்தல் பிரசாரப் பணிகள் நள்ளிரவுடன் நிறைவு

(கொழும்பு)

எதிர்வரும் 6ம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரச்சாரப் பணிகள் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு அதாவது இன்றைய தினம் நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாகத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள், வேட்பாளர்கள் தங்களது பிரசாரப் பணிகளை நிறைவு செய்து கொள்ள வேண்டுமென தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரப் பணிகள் நிறைவடைந்த தன் பின்னரான காலத்தில் பிரசாரத்தில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## சைவமும் தமிழும் தளைத்தோங்க அரணாக நின்று செயற்பட்டவர்

### நல்லை ஆதீனத்தின் மறைவுக்கு சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

சைவத் தமிழ் உலகின் காவலனாய் சைவமும் தமிழும் தளைத்தோங்க அரணாக நின்று செயற்பட்டவர் நல்லை ஆதீனத்தின் இரண்டாம் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் என சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சுவாமிகள் தேகவியோகம் அடைந்தமை குறித்து சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சைவத்தமிழ் நல்உலகம் செய்த நற்பயனால், எமது தாய்த்திருநாட்டிற்குக் கிடைத்த அரும்பெரும் செல்வம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். அவர்கள் சைவமும் தமிழும் தளைத்து ஓங்க அரணாக நின்று செயற்பட்டவர்.

அமைதியான சுபாவமும் ஆழ்ந்த ஞான செழுமையும் எதிலும் நற்பொருளைக் காண்கின்ற நேரிய மனப்பான்மையும் எல்லோரிடத்தும் அன்பு பாராட்டுகின்ற தன்மையும் எந்த ஒரு ஆன்மீக சபையிலும் முன்னிலை வகிக்க இறையருள் கைகூடியது.

சகல மத அமைப்புகளுடனும் சிறப்பான உறவுகளைப் பேணிய பெருந்தகை. எல்லோருடைய கருத்துக்களிற்கும் மதிப்பளிப்பதனால் அனைவராலும் மதிக்கப்பட்டார்.

எமது நாடு அல்லலுற்று, நிலை குலைந்து மக்கள் வேதனைப்பட்ட போதெல்லாம் மக்களின் துயர் துடைப்பதில் முன்னின்று செயற்பட்ட மகான்.

எமது மண்ணிலே தனித்துவமான ஆதீனமாக தமது காத்திரமான செயற்பாடுகளினால் பெருமையுறச் செய்து, சைவத் தமிழ் காவலனாக மிளிர்ந்தவர். இன்று எம் அனைவரது உள்ளங்களிலும் போற்றப்படும் உன்னத நிலையை அடைந்துள்ளார் என்றுள்ளது. (ம-7)

## யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

வவுணதீவு பாலக்காடு வயல் பிரதேசத்தில் வேளாண்மைக்கு நீர் பாய்ச்ச சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நாவற்காடு மஞ்சுகட்டமைச் சேர்ந்த 70 வயதுடைய வைரமுத்து மகாலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த விவசாயி வழமைபோல வேளாண்மைக்கு நீர் பாய்ச்சுவதற்குச் சென்ற நிலையில் வீடு திரும்பாமையினால் உறவினர்கள் அவரைத் தேடிச் சென்ற போது அவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இந்தியா - பாகிஸ்தான் போரால் இலங்கைக்கு பாதிப்பு கிடையாது

(கொழும்பு)

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையில் போர் மூண்டால் அது இலங்கைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தப் போவதில்லை என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில் போர் பலம் கொண்ட இரண்டு முக்கிய நாடுகளாக இந்தியாவையும் பாகிஸ்தானையும் கருத முடியும் எனவும் அந்த வகையில் ஒப்பீட்டால் இலங்கை ஓர் நெத்தலி போன்றதொரு சிறியது.

தற்பொழுது நாட்டு மக்கள் மிகவும் சிரமப்பட்டு உணவு உட்கொண்டு வாழ்க்கையை முன்னெடுப்பதாகவும் இந்தியா - பாகிஸ்தான் போர் மூண்டால் அதனால் இலங்கை மக்கள் இழப்பதற்கு விசேடமாக ஏதுவுமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு வெளியீடு

(கொழும்பு)

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2024/2025 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான வழிகாட்டல் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இந்தக் கையேடுகள் நேற்றைய தினமே நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இன்று சனிக்கிழமை முதல் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி-8)

## பொலிஸ் காவல் கோரிய பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதால் தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான எழுத்துமூலக் கோரிக்கை நேற்று முன்தினம் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவிடம் முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பதவி சார்ந்த கடமைகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் உயிருக்கு பாதாள உலகக் கும்பல் தலைவர் கஞ்சிபானை இம்ரானிடமிருந்து அச்சுறுத்தல் காணப்படுவதாக சமீபத்தில் தகவல் வெளியானது.

இவ்வாறான சூழலிலேயே தனது பாதுகாப்பு முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளதாகவும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் தகுந்த பாதுகாப்பை வழங்குமாறு தேசபந்து தென்னகோன் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025-12.11.2026 வரை

## ராகு வரும் இடம் ஆறாகும் வாழ்க்கை இனி ஜோராகும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்






இதுவரை உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், 26.04. 2025 அன்று 6 ஆம் இடத்திற்கு வருகிறார். 6 இல் ராகு இருந்து குரு கேத்திரத்தில் இருந்தால் "அஷ்டலட்சுமி யோகம்" உருவாகும் அந்த யோகம் குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் செயற்படும் அதே நேரம் கேது பகவான் உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். எனவே விரயங்கள் கூடுதலாக இருக்கும்.

எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான 6 ஆம் இடத்திற்கு ராகு வரும் பொழுது மறைமுக எதிர்ப்பு அதிகரிக்கும். மனக் கவலை கூடும். திறமை மிக்கவர்களாக நீங்கள் இருந்தாலும் சில காரியங்களைச் செய்ய இயலாமல் போகலாம். வரவைக் காட்டிலும் செலவு கூடும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகள் கூடுதல் பொறுப்புகளை வழங்கி உங்களைச் சோதித்து பார்ப்பார்கள்.

விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், விரயங்கள் கூடுதலாக இருக்கும். அந்த விரயத்தை சுப விரயமாகவே மாற்றிக்கொள்வது நல்லது. இது போன்ற நேரங்களில் வீடு கட்டுவது, வீடு வாங்குவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம். மதிப்பும், மரியாதையும் உயரும். புதிய கூட்டாளிகளால் தொழிலில் லாபம் குவியும், இக்காலத் தில் உற வினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, சுப விரயங்கள் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். அழகான வீடு கட்டி குடியேற வேண்டும் என்ற எண்ணம் கைகூடும், உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கருத்துகளை ஏற்றுக்கொள்வர். ஆன்மிக சுற்றுலாக்கள் மகிழ்ச்சியைத் தரும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் ராகுபகவான் சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பார்த்த இலாபம் எளிதில் கிடைக்கும். தொழிலில் கூட்டாளிகளை மாற்றுவது பற்றி சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் இணக்கமாக நடந்து கொள்வர். தற்காலிக பணியில் இருந்தவர்கள் நிரந்தரப் பணிக்கு மாறும் வாய்ப்பு உண்டு. ஊதிய உயர்வு மட்டுமல்லாமல் கூடுதல் சலுகையும் கிடைக்கும். உங்கள் வேலையில் குறை கூறிய மேலதிகாரிகள் இப்பொழுது மனம்மாறுவர். கடன் சுமை குறையும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியாக செவ்வாய் விளங்குவதால் நினைத்தது நிறைவேறாமல் போகலாம். மன வருத்தங்கள் அதிகரிக்கும். மகத்தான பொறுப்பில் உள்ளவர்களுக்கு பக்கத்தில் உள்ளவர்களால் சிக்கல்கள் ஏற் படும். வரவு ஒரு மடங்கு வந் தால் செலவு இரு மடங்காக லாம். மருத்துவத்திற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது விரயங்கள் மிகமிக அதிகரிக்கும். எவ்வளவு விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டாலும், போராட்டங்களைச் சந்திக்கும் சூழல் வரத்தான் செய்யும். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும் இடமாற்றம் இனிமை தராது. தொழில் நடத்துபவர்கள், உத்தியோகத்திற்குச் செல்லலாமா? என்று சிந்திப்பீர்கள், அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. மற்றவர்களுக்குப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் மனக்கலக்கம் ஏற்படும். வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6. 2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான பலன்களைக் காணப்போகிறீர்கள். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக அமையும். வருமானம் உயரும். எந்த நேரத்தில் எதைச் செய்ய நினைத்தாலும் செய்ய இயலும் அளவிற்குப் பொருளாதார நிலை இடம்கொடுக்கும். நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் உங்கள் திறமையைக் கண்டு அதிகாரிகள் ஆச்சரியப்படுவர். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11. 2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் தானாக வந்து சேரும். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கட்டடம் கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் மேல்படிப்பு மற்றும் வெளிநாடு சென்று பணிபுரிய எடுத்த முயற்சி கைகூடும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். தாழ்வு மனப்பான்மையை அகற்றிக் கொண்டு செயற்படுவது நல்லது.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அப்பொழுது உங்களுக்கு கண்டக சனியின் ஆதிக்கம் உருவாகிறது. எனவே மன அமைதி குறையும். குடும்பத்தில் சலசலப்பு அதிகரிக்கும். வந்த வரன்கள் வாசலோடு நிற்கும். எதிர்பார்த்த காரியங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். தொழில் கூட்டாளிகள் தொல்லை தரும் கூட்டாளியாக மாறுவர். எதிர்காலத்தை பற்றிய பயம் அதிகரிக்கும். ஆரோக்கிய தொல்லையால் விரக்தி ஏற்படும். பொது வாழ்வில் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். இக்காலத்தில் கவனத்தோடு செயற்படுவது நல்லது.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு - கேது பெயர்ச்சிக் காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. வருகிற 11.5.2025 அன்று குருபகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். இதன் பலனால் குடும்ப ஸ்தானம் பலமடைகிறது. எனவே குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். வீடு வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். எனவே இடம், பூமியால் ஆதாயம் உண்டு. எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும்கடன் சுமை எவ்வளவு கூடினாலும் அதைப் படிப்படியாக கொடுக்க வாய்ப்புகள் உருவாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லையில்...

நபர்களில் ஒருவர் இராணுவ பொறியியலாளர் படையின் ஓய்வுபெற்ற கப்டனும் கடைசியாகக் கொக்காவில் முகாமில் கடமையாற்றியவருமாவார். (ம-7,4)

## பாம்பு தீண்டிய...

பாம்பு தீண்டியதில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்குறித்த தம்பதியருக்கு இரண்டு வயதுடைய இரட்டைப் பெண் குழந்தைகள் இருக்கும் நிலையில், கடந்த 30ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் தூங்கிக் கொண்டிருந்த பிள்ளைகள் மீது பாம்பொன்று இருப்பதைத் தாயார் அவதானித்துள்ளார்.

கணப்பொழுதில் குறித்த விசப் பாம்பை தனது கைகளால் தூக்கி எறிந்தபோது அவரைப் பாம்பு தீண்டியுள்ளது.

காயமடைந்த அவரை உறவினர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

தன் உயிரைத் துச்சமென நினைத்து பிள்ளைகளின் உயிரைக் காப்பதே தாயன்பு என சம்பவத்தை அறிந்தவர்கள் தாயாரைப்பாராட்டியுள்ளனர். (ம-7,4)

## மதுக்...

மதுபானசாலைகளும் எதிர்வரும் 6 ஆம் திகதி மூடப்படும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் கொண்டவற்றைத் தவிர, அனைத்து மதுபான சாலைகளையும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் காரணமாக மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7,4)

## இலங்கைத்...

தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி நெல்லியடியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மே தினக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக ஆணித்தரமாக தங்கள் வாக்குகளைச் செலுத்தாது விட்டால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கைவிட்டு விட்டார்கள் என்று சந்தேகிக்கப்படுவது உறுதியானதாகிவிடும். ஒருமுறை மாறிப்போடலாம் அதை நியாயப்படுத்தலாம். அடுத்தடுத்த தேர்தல்களிலும் இவ்வாறு நடந்தால் அதனை நியாயப்படுத்த முடியாது.

நாம் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரானவர்கள் அல்லர். தலைமைத்துவம் தவறாக நடப்பதால் ஒட்டுமொத்த கட்சியும் தவறான பாதையில் கொண்டு செல்லும் நிலைமைதான் இன்றுள்ளது.

அந்தக் கட்சிக்குள் இருக்கும் நேர்மையானவர்கள் சரியான முடிவை எடுக்க இந்தத் தேர்தல் ஒரு சந்தர்ப்பமாக இருக்கவேண்டுமானால் கட்சிக்குள் இருக்கும் அவர்கள் விவாதத்தை உருவாக்க வேண்டுமானால் எந்தளவுக்கு தேசிய மக்கள் சக்தியை ஓரங்கட்ட வேண்டுமோ அதேயளவுக்கு தமிழ் அரசுக் கட்சியையும் ஓரங்கட்ட வேண்டும்.

அப்படி ஒரு தெளிவான பாடம் கற்பித்தால் மட்டும்தான் தமிழ் அரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய நேர்மையான உறுப்பினர்கள் மேலோங்க முடியும்.

தவறான தலைவர்களை வெளியேற்ற முடியும். இது தமிழ் அரசுக் கட்சியை தோற்கடித்து முற்றுமுழுதாக ஓரங்கட்டும் செயற்பாடு அல்ல. அப்படிச் செய்ய முடியாது செய்யவும் கூடாது.

தமிழ் அரசுக் கட்சி தவறான கொள்கையை கைவிட்டு அந்தக் கட்சியை நிறுவிய தந்தை செல்வநாயகத்தின் கொள்கையின்படி நேர்மையாக பயணிக்க முன்வந்தால் அந்தக் கட்சியின் தவறான தலைமைத்துவத்தை மாற்றி திருத்தி சரியான பாதைக்கு அவர்கள் வருவதாக இருந்தால் நாம் நிச்சயமாக அவர்களுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வந்து இணைந்து பயணிப்போம் எனத் தெரிவித்தார். (ம-7,4)

## இனவாதத்தை...

சந்திரசேகர் குற்றஞ்சாட்டினார்.

யாழ்.வேலணைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலும், தெற்கிலும் மக்களை பிரித்தாளும் இனவாதத்தைத் தோற்கடித்து, முன்னோக்கி செல்ல தேசிய மக்கள் சக்திக்கு இம்முறையும் தமிழ் மக்கள் பேராதரவு வழங்க வேண்டும்.

இந்நிலையில் வாக்கு அரசியலுக்காக மக்களைப் பிரித்தாளும் அரசியலை ராஜபக்ச அணி தெற்கில் முன்னெடுத்து வருகின்றது. கடந்த காலங்களில் மக்கள் பாடம் புகட்டியும் அவர்கள் திருந்துவதாக இல்லை.

அதேபோல வடக்கிலுள்ள சிலரும் ராஜபக்சக்களின் சகோதரர்களாக மாறி மக்களைப் பிரித்தாளும் பிரசாரத்தை செய்கின்றனர் என்றார். (ம-7,4)

## கண்ணி...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மோதல்களுக்குப் பின்னர் எழுந்த ஒரு தேவையாக இருந்தாலும், கண்ணிவெடி அகற்றல் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். இந்தச் செயன்முறை பௌதிக ஆபத்துக்களை அகற்றுவது மட்டுமல்ல, மக்களின் கண்ணியம், வாழ்வாதாரம் மற்றும் அமைதியான எதிர்காலத்திற்கான வாக்குறுதியை மீட்டெடுப்பது பற்றியதும் ஆகும்.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவது, பிள்ளைகள் பாதுகாப்பாக விளையாடுவது, விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு அச்சமின்றித் திரும்புவது, மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மீண்டும் கட்டியெழுப்புவது போன்ற விடயங்களுக்கு கண்ணிவெடிகளை அகற்றுவது மிகவும் முக்கியம்.

வடக்கு மற்றும் கிழக்கில் சுமார் 23 சதுர கிலோமீற்றர் நிலம் இன்னும் கண்ணிவெடிகள் காரணமாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

எனவே கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை பொதுமக்கள் விரைவில் பயன்படுத்தக்கூடியதாக மாற்ற வேண்டும். 2028 ஜூன் 1ஆம் திகதிக்கு முன்னர் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான ஒப்பந்தத்தின் பிரிவு 5 இன் கீழ் உள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றார். (ம-7,4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 5819
J 1 1 9 4 3 6
அத சம்பத J 9 4 3 6
சீட்டிழுப்பு இலக்கம் 0394
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1849
V 19 41 45 65 V
52205

மெகா பவர்
திகதி 02/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2167
T 26 02 61 74 77

ஜய
திகதி 2025.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 087
V 4 5 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4061
சீட்டிழுப்பு திகதி 02.05.2025
E 47 64 77 79
E
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 1128
துலாம் 09 24 40 43 துலாம்
49151 45

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.05.2025 வெற்றி வாரம் 527
K 6 0 1 3 3 7
78652
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,526,395.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2793
சீட்டிழுப்பு திகதி 2025.05.02 தினம் வெள்ளிக்கிழமை
06 66 71 77 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,634,020.80

சனிதா
திகதி 02.05.2025 வெற்றி வாரம் 4954
06 09 22 29 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,371,232.00
56006

சசிரி
வெற்றி வாரம் 674
02.05.2025 வெள்ளிக்கிழமை
12 21 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4505
சீட்டிழுப்பு திகதி 02.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
12 28 31 48 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,359,318.80
235775

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 32 01 28 50 73
1969
02.05.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட்

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2619
சீட்டிழுப்பு திகதி 2025.05.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,435,244.80
20 68 71 72 W
436828


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

**076 XXX X523**

மேற்படி தொடர்பு இலக்கம்
எமது சேவையில்
இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

**ஈ - சன்ஸ்**

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613

(C-2876)

# ICT

## A/L 2027 ஆரம்பம்

கலைவாணி கல்வி நிறுவனம் - கோப்பாய்
14.05.2025 புதன் 7.00 PM
(நேர ஒழுங்கு கலந்துரையாடப்படும்)
E. சிவச்செல்வன் (B.IT, M.Ed)
077 614 6431,070 647 9747

(1087)

# Village Hotel
## Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503

(3992)

# DMI Jaffna

A/L - 2025 Day Class

ஆரம்பம் – 06.05.2025 காலை 9 மணி
ACC - D.Sam
B.S - பசில் கேஷோன்
ECO - M.லிஜிதன்
077 848 0604

(C-2875)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2879)

# யாழ் மாநகரசபைத் தேர்தல்

எண்ணிம செயற்திட்டங்களுடன்
" தூயகரங்கள் - தூயநகரம் "

02ம் வட்டாரம் - கந்தர்மடம் வடமேற்கு J/100, 102, 123(பகுதி)



வேட்பாளர்
**இராசநாயகம் ரவிசங்கரன்**
மென்பொருள் பொறியியலாளர்
சட்டத்துறை மாணவன்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
077 678 2336



வேட்பாளர்
**சங்கரப்பிள்ளை சிவலோகேசன்**
தொழிலதிபர்,
செயலாளர், யாழ் வணிகர் கழகம்
077 308 6894





X





அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
தமிழ்த் தேசியப் பேரவை

(C-2878)

# காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60,00000/=

076 428 4896

(4072)

# தேவை

65 வயதிற்கு மேற்பட்ட முச்சக்கரவண்டி ஓட்டுனர் ஆண் தேவை.
அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம் போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.

077 609 6581

(1091)

# Sun Marketing (Pvt) Ltd
## வேலைவாய்ப்பு
(யாழ்ப்பாணம்)

**1.விற்பனைப் பிரதிநிதி**
- விற்பனை அனுபவம், தொடர்புத் திறன் தேவை.
- மோட்டார் சைக்கிள் உரிமம் இருந்தால் சிறப்பு.

**2.ஓட்டுநர்**
- செல்லுபடியான ஓட்டுநர் உரிமம்.
- குறைந்தது 2 வருட அனுபவம்.
- வழிநடத்தலில் நன்கு தேர்ச்சி.

தொடர்புக்கு:
076 139 1993
விண்ணப்பிக்க:
sunmarket012@gmail.com

(1089)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg சம்பா அரிசி | - 240/= | Max 2Kg |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 400/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 215/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 700g சுபோஷா(திரிபோஷா) | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |



400g Anchor
1040/=
~~1100/=~~



1Kg சவர்க்காரத் தூள்
270/=
~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(1092)

# யாழ். மாநகர சபைத் தேர்தல் - 2025



**துரைராஜசிங்கம் இராஜன்**
ஓய்வுநிலை பதில் பொறியியலாளர்,
தொழில்நுட்ப உத்தியோகத்தர்
வட்டாரம் 03 | J/103



**சண்முகம் லோகசிவம்**
வட்டாரம் - 04 | J/106, J/107
J/108 இராஜதானி
ஓய்வுபெற்ற சனசமூக நிலைய உத்தியோகத்தர்
பொதுசன தொடர்பு அதிகாரி தகவல் வழங்கும் உத்தியோகத்தர்
பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு
வட மாகாண உறுப்பினர்



**Dr.வ.தேவானந்தம்**
பல் மருத்துவர்
வட்டாரம் - 08 | J/104, J/105
கந்தர்மடம் தெற்கு

**வீட்டின் வெற்றியே – சேவையின் உறுதி**

ஏற்கனவே எமக்குள்ள அனுபவத்தின் அடிப்படையில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ் மக்கள் தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் குழப்பமற்ற அமைதியான ஊழலற்ற தேசியத்துடனான அபிவிருத்தி மற்றும் மக்களுக்கான சிறப்பான நிர்வாகம் பெற்றுக்கொள்ள முடியுமென உறுதி கூறுகிறோம்.



X

தமிழ் அரசுக் கட்சி

(4082)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.